**பனை அபிவிருத்திச் சபை - 2015**

-----------------------------------------------------------

பனை அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பனை அபிவிருத்திச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்

**எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 – ஆதனம், பொறி மற்றும் உபகரணம்:-** முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 8,063,716 கிரயத்தில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் அவற்றின் பாவனைக் காலத்தை மீளாய்வு செய்யாமல் சபையால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்ததுடன் நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் மாற்றங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

#### 2.2.2 இனங்காணப்படாத வேறுபாடுகள்

மீளாய்வாண்டிற்கான பேரேட்டுக் கணக்குகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட 06 உருப்படிகளின் பெறுமதிக்கிடையே ரூபா 1,036,137 கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இந்த வித்தியாசங்களிற்கான காரணங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்றாம் தரப்பினருக்கு வழங்கப்பட்ட ரூபா 1,444,866 முற்பணத்தை அறவிடுவதற்கு ஐந்து ஆண்டுகளிற்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 5,293,588 தொகையான மீதிகள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாமல் செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(இ) ரூபா 18,000 உற்சவ முற்பணம் ஆறு வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களிற்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ளவாறு ரூபா 59,180,659 பெறுமதியான கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெறாத சான்று |
|---|---|---|
| | ரூபா | |
| காணி மற்றும் கட்டிடங்கள் | 50,094,735 | விலை மதிப்பீட்டறிக்கைகள் |
| பதவியணியினர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 259,172 | தனிநபர் கடன் கோவைகள் |
| வாடகைக் கொடுப்பனவுகள் | 7,791,247 | விலை மதிப்பீட்டறிக்கைகள் |
| எரிபொருள் செலவினம் | 851,065 | உத்தியோகத்தர்களின் கையொப்பம் மற்றும் பிரயாணம் செய்த நோக்கம் |
| மின்சாரம் | 184,440 | மூல விலைப்பட்டியல்கள் |

**2.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் | இணங்காமை |
|---|---|
| **(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம்** | |
| (i) 12 ஆம் பிரிவு | சபையின் நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகையின் அமைப்பு மற்றும் உள்ளடக்கங்கள் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் உரிய அமைச்சரால் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் இது அதற்கேற்றவாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 14(3) ஆம் பிரிவு | 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிற்கான சபையின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | வேண்டப்பட்டவாறு இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 135 | சபையின் தலைவரால் நிதி அதிகாரம் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 272(3) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் அவை தொடர்புபட்ட மாதத்தின் இறுதியிலிருந்து ஆறு கிழமைகளிற்கு பிந்தாமல் மாதாந்தம் கணக்காய்விற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

(iv) நிதிப்பிரமாணம் 445 — மாவட்ட அலுவலகங்கள் மற்றும் நிலையங்களால் இருப்புப் பதிவேடு முறையாக பேணப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிப்பிரமாணம் 715 — சபைக்குச் சொந்தமான நிலையங்களால் முறையான களஞ்சிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(vi) நிதிப்பிரமாணம் 751(i) — இருப்புப் புத்தகங்களில் பொருட்களின் கொள்வனவுகளை பதிதல் மற்றும் பேணுதல் தொடர்பில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(vii) நிதிப்பிரமாணம் 756 (5) — பெறுவனவுகள் வழங்கல்கள் மற்றும் முன்கொண்டுவரப்பட்ட மீதி என்பவற்றை காட்டும் வகையில் பொருட்பதிவேடு உடனடியாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

களஞ்சிய மெய்மையாய்விற்காக குறித்துரைக்கப்பட்ட படிவங்கள் சபையால் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(viii) நிதிப்பிரமாணம் 757(1)(இ), (2)(அ) மற்றும் (2)(இ)

- (i) வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் தாமதமின்றி தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
- (ii) முன்னைய ஆண்டுகளிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் மீதான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை
- (iii) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) நிதிப்பிரமாணம் 1010(ஆ) — சபையால் வாகனங்கள் பௌதீகரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை**

(i) 4.2.2 ஆம் பந்தி — சபையானது திட்டத்திற்கேற்ப உள்ளபடியான செயலாற்றலை உறுதிப்படுத்துவதற்கு அதன் கூட்டிணைந்த திட்டம், பாதீடுகள், செயலாற்றல்களை காலரீதியாக மீளாய்வு செய்திருக்காததுடன் பரந்த வேறுபாட்டு முரண்கள் தொடர்பில் திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 4.2.5 ஆம் பந்தி — சபையானது அதன் நடைமுறை மூலதனத்தின் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்திற்கான நிறுவக முறைமைகளைக் கொண்டிருக்கவில்லை. பின்வரும் கூற்றுக்கள் சபைக் கூட்டங்களில் மாதாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(அ) கடன்பட்டோரினதும் கடன்கொடுத்தோரினதும் வயதுப் பகுப்பாய்வு

(ஆ) இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு

(இ) பழைய, மெதுவாக அசையும் மற்றும் வழக்கிழந்த இருப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களை இனங்காணும் கூற்று

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் வேலையானது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 10,416,894 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 125,783,577 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் சபையின் நிதி விளைவுகளில் ரூபா 115,366,683 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள் காரணமாக மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கெதிராக ரூபா 131,538,113 ஆன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினம் மற்றும் பயிற்சி செலவினம் என்பவற்றினை பதிவழித்தல் இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகள் ரூபா 125.78 மில்லியன் பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான சபையின் பங்களிப்பு ரூபா 200.89 மில்லியனாக இருந்தது. ஆகையால், மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதிச் சேர்க்கை ரூபா 75.11 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளின் இறுதியில் பெறுமதிச் சேர்க்கையின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **விபரம்** | **2015** | **2014** | **2013** | **2012** | **2011** |
|---|---|---|---|---|---|
| | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| ஆண்டிற்கான பற்றாக்குறை | (125.78) | (10.42) | (12.58) | (9.76) | (3.15) |
| கூட்டு: | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 113.93 | 63.73 | 57.58 | 51.97 | 49.94 |
| வீதங்களும் வரிகளும் | 0.03 | 0.04 | 0.04 | 0.01 | 0.03 |
| பெறுமானத்தேய்வு | 86.93 | 12.12 | 13.16 | 8.62 | 6.31 |
| **மொத்தப் பங்களிப்பு** | **200.89** | **75.89** | **70.78** | **60.60** | **56.28** |
| **பெறுமதிச் சேர்க்கை** | **75.11** | **65.47** | **58.20** | **50.84** | **53.13** |

மீளாய்வாண்டின் போது ஆளணி வேதனங்கள் மற்றும் பெறுமானத்தேய்வு அதிகரித்தமை மீளாய்வாண்டிற்கான பெறுமதிச் சேர்க்கையின் முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக பங்களித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 155,929,309 ஆக இருந்த போதிலும் அதில் ஆளணி வேதனங்களிற்காக ரூபா 113,933,123 ஏற்பட்டிருந்ததுடன் மொத்தச் செலவினத்தில் 73 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பிரதான நோக்கங்களை அடைதல்**

சபையானது வெல்லம், வஞ்சகம், இனிப்புக் கள், கற்கண்டு, போத்தல் கள், வினிகர், போத்தல் கூழ், பனாட்டு, பானிப் பனாட்டு, ஜாம், கோடியல், பரிமாறத் தயாரான குடிபானம், மருத்துவ அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள், பனங்கிழங்கு (புதியது), உலர்ந்த கிழங்கு, உலர்ந்த கிழங்கு மா, வேகவைத்த கிழங்கு மா, பாம் போஷா (Palm posha), பிஸ்கட்டுக்கள், குதப்பிகள், பாரம்பரிய கைவினைப் பொருட்கள், நெசவு போன்ற பிரம்புக் கூடைகள், பிரம்புக் கதிரைகள், மரமுந்திரிகை பொதிசெய்வதற்கான பெட்டிகள், தேநீர் மற்றும் மசாலாக்கள், தொப்பிகள், பாய்கள், விளக்குமாறுகள், பல்குத்திகள், வளைந்த குச்சிகள் போன்ற ஈக்குப் பொருட்கள், பூச்சாடிகள், அலங்காரப் பொருட்கள், வோல் ஹங்கர்கள் (wall hangers), தோட்டக்கலை தாவரங்களிற்கான வளர்ச்சி ஊடகமாக நார் தூசி, மண் அமிலத்தன்மை கட்டுப்பாடு, கடின இழை – கனரக தூரிகைகள், நடுத்தர இழை – சுத்தமாக்கும் மற்றும் வீட்டுத் தூரிகைகள், மென்மையான இழை, நூல், நார் கைவினைப்பொருட்கள், நிர்மாண நோக்கங்கள், தளபாடம் தயாரித்தல், சிப் பலகைகள் (chip boards) மற்றும் விறகு போன்ற பனை உற்பத்திப் பொருட்களின் பல்வேறு வகைகள் தொடர்பாக அதன் உற்பத்திப்பொருள் மட்டங்கள், மற்றும் சந்தைப்படுத்தலை அதிகரிப்பதனூடாக தேசிய பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆரோக்கியமான சமூகம் என்பவற்றிற்கான பங்களிப்பு போன்ற அதன் பிரதான நோக்கங்களை அடைவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திக்கம் வடிசாலை செயற்திட்டத்தின் செயற்பாடு**

2008 ஏப்ரல் 10 இல் வடமராட்சி பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க தொகுதி செயற்திட்டம் மற்றும் சபை என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம், பனை அபிவிருத்திச் சபையால் சொந்தமாக்கப்பட்ட பெறுமதியான சொத்துக்கள் குத்தகை அடிப்படையில் பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010, 2011, 2013, 2014 மற்றும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி சபையின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) 2008 மே இலிருந்து குத்தகை உடன்படிக்கையின் 01 மற்றும் 02 ஆம் பந்தியின் பிரகாரம் மாதாந்த உரிமைத்தொகை மற்றும் குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையால் வழங்கப்பட்ட பெறுமதியான சொத்துக்களை கையேற்பதற்கு பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2016 பெப்ரவரி 25 இல் மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பல சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிராதமையை/ சேதமடைந்திருந்தமையை இது வெளிப்படுத்தியது.

**(இ) நட்டத்தில் இயங்கும் மாதிரிப் பண்ணைகள்**

ஐந்து மாதிரிப் பண்ணைகள் தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குகின்றதுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 03 ஆண்டு காலப்பகுதியின் போது நிலைத்திருந்த நட்டங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மாதிரிப் பண்ணையின் பெயர் | ஆண்டுகளிற்கான தேறிய நட்டம் | | | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2013 | 2012 |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| குடத்தனை | 688,821 | 545,045 | 462,273 | 475,675 |
| மாமுனை | 608,282 | 694,221 | 571,755 | 759,630 |
| நெடுந்தீவு | 60,000 | 61,620 | 380,044 | 61,180 |
| புளியங்குளம் | 2,383,310 | 1,771,618 | 700,423 | 800,215 |
| வீரவில | 2,302,275 | 1,415,480 | 1,718,931 | 1,954,470 |
| **தேறிய நட்டம்** | **6,042,688** | **4,487,984** | **3,833,426** | **4,051,170** |

85 ஏக்கர்கள் மொத்தப் பரப்பளவுடனான கீழ் குறிப்பிடப்பட்ட இரண்டு மாதிரிப் பண்ணைகள் 2010 இலிருந்து முழுமையாக விளைவற்றிருந்தன. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| பண்ணையின் அமைவிடம் | காணியின் பரப்பு (ஏக்கர்கள்) |
|---|---|
| மாமுனை | 78 |
| அறிவியல் நகர் | 07 |
| **மொத்தம்** | **85** |

**(ஈ) நாட்டப்பட்ட விதைகள் மற்றும் பனங்கன்றுகளின் செயலாற்றல்**

2012 தொடக்கம் 2015 வரையான ஆண்டுகளின் போது நாட்டப்பட்ட விதைகள் மற்றும் பனங்கன்றுகளின் செயலாற்றல் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

| | நாட்டப்பட்ட விதைகளின் எண்ணிக்கை | நாட்டப்பட்ட பனங்கன்றுகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|
| 2012 | 19,000 | 59,055 | 78,055 |
| 2013 | 90,130 | 51,560 | 143,810 |
| 2014 | 382,700 | 25,610 | 408,310 |
| 2015 | 1,183,755 | 4,000 | 1,187,755 |

விளைச்சல் வீதத்தை அதிகரிக்கும் நோக்கில், பயனுறுதிமிக்க நடுகைக்கான தந்திரோபாய நகர்வொன்றாக 2012 இல் பனங்கன்றுகளை நடுதல் அறிமுகப்படுத்தப்பட்டது. பனங்கன்றுகளை நடுதல் ஆரம்ப கட்டத்தில் 70 - 75 சதவீத சிறந்த விளைச்சல் வீதத்தை காட்டிய போதும் பனங்கன்றுகள் கால்நடை மற்றும் பன்றிகளால் (கிழங்கிற்காக) இலகுவாக அகற்றப்பட்டிருந்த சில திறந்த தோட்டப் பகுதிகளில் இது நீடித்திருக்கவில்லை. இந்த நிலைமை திறந்த பகுதித் தோட்டத்தில் 10 சதவீதத்தைவிட குறைவான விளைச்சலிற்கு வழிவகுத்த அதேநேரம் மூடிய பகுதிகளில் (நல்ல கவனிப்புடன் வேலியிடப்பட்ட காணிகள்) நாட்டப்பட்ட பனங்கன்றுகள் இறுதிக் கட்டத்திலும் 70 சதவீத விளைச்சல் வீதத்தைக் காட்டியது.

ஆகையால், பனங்கன்று உற்பத்தி கடந்த ஆண்டு குறைவடைந்திருந்ததுடன் சிக்கனமான பயனுறுதிமிக்க நடுகையை மேற்கொள்ளும் நோக்கத்துடன் வேலியிடப்பட்ட காணிக்காக பனங்கன்றுகளும் திறந்த பகுதி (வீதி ஓரங்கள், தரிசுநிலங்கள்) நடுகைக்காக விதைகளும் மாத்திரம் வழங்கப்பட்டன.

## 4.2 முகாமைத்துவப் பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வீரவில மாதிரிப் பண்ணையில் உற்பத்திசெய்யப்பட்ட கைவினைப் பொருட்களிற்காக திஸ்ஸமஹாராமவில் பாரிய கேள்வி இருப்பதால் வீரவில மாதிரிப் பண்ணையின் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்தப் பண்ணை அந்தப் பொருட்களை உயர்ந்த போக்குவரத்துக் கிரயத்திற்கு வழிவகுக்கின்ற கொழும்பு மற்றும் மட்டக்களப்பில் கொள்வனவு செய்திருந்தது.

(ஆ) சந்தைப்படுத்தல் மற்றும் உற்பத்திகள் முகாமையாளர் மற்றும் 51 ஏனைய பதவியணியினர் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட வேண்டப்பட்ட தகைமைகள் இல்லாமல் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(இ) யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த மாவட்ட அலுவலர்களுக்கான கொடுப்பனவுகள் மீளாய்வாண்டின் போது ஒருங்கிணைப்பாளரின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஈ) உற்பத்தி கிரயங்களின் அதிகரிப்பு மற்றும் உற்பத்தி நிலையங்களின் மோசமான பராமரிப்புக் காரணமாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் நிலையங்களில் பனந்தும்பு உற்பத்தி குறைந்து செல்லும் போக்கினை பதிவுசெய்திருந்தது.

(உ) பனை அபிவிருத்திச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த கொழும்பு – 04 இல் உள்ள கட்டிடத்தின் உப குத்தகைக்கு விடப்பட்ட பகுதிக்கான மின்சாரம் அதேபோல் தண்ணீர் என்பவற்றிற்கான செலவினங்கள் தொடர்பாக 2016 மார்ச் 11 இல் பொது முயற்சிகள் கணக்குக் குழுவால் வழங்கப்பட்ட நெறிப்படுத்தல்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டிடத்தின் உப குத்தகைக்கு விடப்பட்ட பகுதியின் மேற்படி விலைப்பட்டியல்கள் தனித்தனியாக செலுத்தப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஆவணங்களை அனுப்புவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு கட்டளையிடப்பட்டது.

(ஊ) ரூபா 7,377,318 கிரயத்தில் காரைநகரில் கைத்தொழில் தொகுதிக் கட்டிடம் மற்றும் ரூபா 900,000 கிரயத்தில் நெடுந்தீவு தும்பு நிலையம் என்பன காணிகளின் உரிமைத்துவம் சபைக்கு சொந்தமாக்கப்பட்டிருக்காத போதும் கட்டிடக் கணக்கிற்கு மூலதனமாக்கப்பட்டதுடன் முறையே ரூபா 3,273,527 மற்றும் ரூபா 180,000 திரண்ட பெறுமானத்தேய்வுக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(எ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சால் நிதியிடப்பட்ட வாழ்வாதார விசேட செயற்திட்டம் மீது ஏற்பட்ட ரூபா 29,572,520 தொகைக்கான விபரமான செலவினக் கூற்று தயாரிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 10 நபர்களிடமிருந்து தொடர்ச்சியாக அமைய அடிப்படையில் சேவை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஆரம்ப நிலையிலுள்ள 13 மிகைப் பதவியணியினருக்காக அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் மற்றும் ஏற்கனவேயுள்ள 23 வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2015 ஒக்தோபர் 9 இல் ஆட்சேர்ப்புத் திட்டம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பிரகாரம் ஏற்கனவேயுள்ள பதவியணி மற்றும் சம்பளக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 தொடக்கம் 2015 வரையான ஆண்டுகளின் போது 59 பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 14 நபர்கள் ஆட்சேர்ப்புத் திட்டமொன்று இல்லாமல் அதே காலப்பகுதியில் பல்வேறு பதவிகளுக்கு பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் பின்னரும் கூட சம்பள முரண்பாடுகளிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 வாகனங்களின் பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நான்கு வாகனங்களின் ஓட்ட அட்டவணைகளில் பிரயாணம் செய்த 19,652 கிலோமீற்றர்களிற்கான பிரயாணங்களின் நோக்கம் பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 13,547 கிலோமீற்றர்களிற்காக பிரயாணம்செய்த ஒன்பது வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் வாகனங்களைப் பயன்படுத்திய அலுவலர்களின் கையொப்பங்கள் இடப்பட்டிருக்கவில்லை.

(இ) 1990 ஒக்தோபர் 19 ஆம் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் 26 வாகனங்களிற்கான எரிபொருள் நுகர்வுப் பரிசோதனை சபையால் செய்யப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு**

1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(6) ஆம் பிரிவின் பிரகாரம் 2016 ஏப்ரல் 30 இற்கு முன்னர் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 யூன் 06 இலேயே நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்**

(அ) சபையானது பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்தினையும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கையினையும் தயாரித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இது 2016 ஏப்ரல் இலேயே கணக்காய்விற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) விதைகள் மற்றும் பனங்கன்றுகள், வெல்ல உற்பத்தி, கூழ் உற்பத்தி மற்றும் தும்பு உற்பத்தி தொடர்பில் 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சில இலக்குகள் அடையப்பட்டிருக்காதமையால் நல்லாளுகையின் ஆக்கபூர்வமான கருவியொன்றாக இது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**5.3 கூட்டிணைந்த திட்டம்**

சபையானது 2015–2019 காலப்பகுதிக்காக கூட்டிணைந்த திட்டத்தை தயாரித்திருந்த போதும் பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய பிஈடி/ஆர்ஈடி/01/04/2014/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 ஆம் ஆண்டில் இது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

**5.4 கொள்வனவுத் திட்டம்**

2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.5 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2015 ஏப்ரல் 24 இல் சபையால் பிரதம உள்ளகக் கணக்காய்வாளரிற்கு பதவி வறிதாக்கல் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் அவர் சபைக்கெதிராக சட்ட வழக்கு தொடர்ந்து 2016 மார்ச் 11 இல் மீளவேலைக்கமர்த்தப்பட்டிருந்தார். இது தொடர்பில் தொடர்புபட்ட அலுவலரிற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 505,231 தொகை அவரின் பதவிவறிதாக்கப்பட்ட காலப்பகுதியின் போது அலுவலருக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இரண்டு உள்ளகக் கணக்காய்வாளர்களுடன் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் பிரிவின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளிற்காக வேறு உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் பின்வரும் கொடுக்கல் வாங்கல் பரப்புக்கள் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் முழுமையாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை/ மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

(i) மூலதன வேலைகளின் முகாமைத்துவம்
(ii) வாழ்வாதார செயற்திட்ட முகாமைத்துவம்
(iii) முற்பணங்கள் தீர்க்கப்படாமை
(iv) சொத்துக்கள் முகாமைத்துவம்
(v) நிதியத்தின் பயன்பாடு

**5.6 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

சபையானது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்றை ஸ்தாபித்திருந்ததுடன் 2015 இல் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும்,

2005 யூலை 01 இன் பிஈடி/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக்குறைந்தது நான்கு கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும்.

### 5.7 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் பாதீடப்பட்ட மதிப்பீடுகள் இல்லாமல் வாகனங்கள், தளபாடமும் உபகரணமும், கட்டிடங்கள், இயந்திரங்கள் மற்றும் ஆய்வுகூட பரீட்சிப்பு உபகரணம் என்பவற்றின் கொள்வனவுக்கான செலவினமாக ரூபா 11,524,000 கூட்டுமொத்தமான தொகைகள் ஏற்பட்டிருந்தமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. முழுமையாகத் தேய்விடப்பட்ட சொத்துக்களின் நியாயப் பெறுமதியை சமர்ப்பித்தல் மற்றும் நிலையான சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் போன்ற நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடு தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.